www.Padasalai.Net www.CBSEtips.in

No. of Printed Pages : 11

935340

**7236**

பதிவு எண்
Register Number

# Part - III

## சமூக அறிவியல் / SOCIAL SCIENCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 100

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறைபாடு இருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

குறிப்பு : இவ்வினாத்தாள் நான்கு பகுதிகளைக் கொண்டது.

**Note :** This question paper contains **four** Parts.

www.Padasalai.Net

### பகுதி - I / PART - I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **14x1=14**

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CamScanner

1. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந் தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது ?

(அ) சீனா (ஆ) ஜப்பான் (இ) கொரியா (ஈ) மங்கோலியா

Which country emerged as the strongest in East Asia towards the close of nineteenth century ?

(a) China (b) Japan (c) Korea (d) Mongolia

2. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார் ?

(அ) ரூஸ்வெல்ட் (ஆ) சேம்பெர்லின்

(இ) உட்ரோ வில்சன் (ஈ) பால்டுவின்

Who initiated the formation of League of Nations ?

(a) Roosevelt (b) Chamberlain

(c) Woodrow Wilson (d) Baldwin

3. எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது ?

(அ) 1827 (ஆ) 1829 (இ) 1826 (ஈ) 1927

In which year was Sati abolished ?

(a) 1827 (b) 1829 (c) 1826 (d) 1927

4. இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு / அமர்வு எங்கே நடைபெற்றது ?

(அ) மெரினா (ஆ) மைலாப்பூர்

(இ) புனித ஜார்ஜ் கோட்டை (ஈ) ஆயிரம் விளக்கு

Where was the third session of the Indian National Congress held ?

(a) Marina (b) Mylapore

(c) Fort St. George (d) Thousand Lights

5. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா இந்தியாவை ________ லிருந்து பிரிக்கிறது.

(அ) கோவா (ஆ) மேற்கு வங்காளம்

(இ) இலங்கை (ஈ) மாலத்தீவு

The Palk Strait and Gulf of Mannar separate India from ________.

(a) Goa (b) West Bengal

(c) Sri Lanka (d) Maldives

www.Padasalai.Net



CamScanner

6. ஆறுகளின் மூலம் உருவாகும் மண் :

(அ) செம்மண் (ஆ) கரிசல் மண்

(இ) பாலை மண் (ஈ) வண்டல் மண்

The soil formed by the rivers are :

(a) Red soil (b) Black soil

(c) Desert soil (d) Alluvial soil

7. "தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம்" என்று அழைக்கப்படும் டெல்டா ________.

(அ) காவிரி டெல்டா (ஆ) மகாநதி டெல்டா

(இ) கோதாவரி டெல்டா (ஈ) கிருஷ்ணா டெல்டா

The delta which is known as "Granary of South India" is :

(a) Cauvery Delta (b) Mahanadhi Delta

(c) Godavari Delta (d) Krishna Delta

8. **கூற்று :** தமிழ்நாடு தென்மேற்கு பருவகாற்று காலங்களில் அதிக மழையைப் பெறுவதில்லை.

**காரணம் :** இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

(அ) **கூற்று, காரணம்** இரண்டும் சரி. **காரணம் கூற்றை** விளக்குகிறது.

(ஆ) **கூற்று, காரணம்** இரண்டும் சரி. ஆனால் **காரணம் கூற்றை** விளக்கவில்லை.

(இ) **கூற்று** சரி, ஆனால் **காரணம்** தவறு.

(ஈ) **காரணம்** சரி, ஆனால் **கூற்று** தவறு.

**Assertion (A) :** Tamil Nadu does not receive much rainfall from Southwest monsoon.

**Reason (R) :** It is situated in the rain shadow area of the Western Ghats.

(a) Both **(A)** and **(R)** are true and **(R)** explains **(A)**.

(b) Both **(A)** and **(R)** are true but, **(R)** does not explain **(A)**.

(c) **(A)** is true but, **(R)** is False.

(d) **(R)** is true but, **(A)** is False.

9. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது ?

(அ) ஒன்று (ஆ) இரண்டு (இ) மூன்று (ஈ) நான்கு

How many times has the Preamble to the Constitution of India amended ?

(a) Once (b) Twice (c) Thrice (d) Four times

[ திருப்புக / Turn over

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CamScanner

10. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர் :

(அ) குடியரசுத் தலைவர் (ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

(இ) ஆளுநர் (ஈ) பிரதம அமைச்சர்

The Chief Justice and other judges of the Supreme Court are appointed by :

(a) The President (b) The Attorney General of India

(c) The Governor (d) The Prime Minister

11. இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது ?

(அ) வங்காளதேசம் (ஆ) மியான்மர்

(இ) ஆப்கானிஸ்தான் (ஈ) சீனா

With which country does India share its longest land border ?

(a) Bangladesh (b) Myanmar

(c) Afghanistan (d) China

12. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது :

(அ) வேளாண்மை (ஆ) தானியங்கிகள்

(இ) வர்த்தகம் (ஈ) வங்கி

Primary sector consists of :

(a) Agriculture (b) Automobiles

(c) Trade (d) Banking

13. 1632 - இல் ஆங்கிலேயர்களுக்கு ''கோல்டன் ஃபயர்மேன்'' என்ற பட்டத்தை வழங்கியவர் :

(அ) ஜஹாங்கீர் (ஆ) கோல்கொண்டா சுல்தான்

(இ) அக்பர் (ஈ) ஔரங்கசீப்

Who granted the title "Golden Fireman" to the English in 1632 ?

(a) Jahangir (b) Sultan of Golconda

(c) Akbar (d) Aurangazeb

14. இந்தியாவில் உள்ள வரிகள் :

(அ) நேர்முக வரிகள் (ஆ) மறைமுக வரிகள்

(இ) (அ) மற்றும் (ஆ) (ஈ) இவற்றுள் ஏதுமில்லை

In India, taxes include :

(a) Direct taxes (b) Indirect taxes

(c) Both (a) and (b) (d) None of these

www.Padasalai.Net



CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - II / PART - II

குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **10x2=20**

**Note :** Answer **any 10** questions. Question No. **28** is **Compulsory**.

**15.** பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை ?
What are the objectives of International Monetary Fund (IMF) ?

**16.** வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்.
List out the territories annexed by the British under the Doctrine of Lapse.

**17.** ஜாலியன்வாலா பாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
Describe the Jallianwala Bagh Massacre.

**18.** இந்தியாவின் விடுதலை போராட்டத்தில் அன்னிபெசன்டின் பங்களிப்பு யாது ?
What is the contribution of Annie Besant to India's Freedom Struggle ?

**19.** தங்களுடைய எழுத்துக்களின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்பு செய்த ஆளுமைகளை பட்டியலிடவும்.
List out the personalities who contributed to the revival of Tamil Literature through their writings.

**20.** இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.
State the West Flowing rivers of India.

**21.** இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.
Name the four distinct seasons of India.

**22.** வேளாண்மை - வரையறுக்கவும்.
Define - 'Agriculture'.

**23.** இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.
Name the important oil producing regions of India.

[ திருப்புக / Turn over

www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



24. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.
State the Boundaries of Tamil Nadu.

25. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக.
List out the Fundamental Rights guaranteed by Indian Constitution.

26. சார்க் உறுப்பு நாடுகளை பட்டியலிடுக.
List out the member countries of SAARC.

27. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயர்களை எழுதுக.
Write some names of the nutrition programmes in Tamil Nadu.

28. அரசுக்கு நாம் ஏன் வரி செலுத்த வேண்டும் ?
Why do we pay Tax to the government ?

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **42** -க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **10x5=50**

**Note :** Answer **any 10** questions. Question No. **42** is **Compulsory**.

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
(i) "நவீன சீனாவின் தந்தை" என்று அழைக்கப்படுபவர் _________.
(ii) பாளையக்காரர் முறை தமிழகத்தில் __________ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
(iii) இந்தியாவில் "தங்க இழைப்பயிர்" என அழைக்கப்படுவது _________.
(iv) முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை _________ ல் தோன்றியது.
(v) இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் _________.

Fill in the blanks.
(i) _________ was known as the "Father of Modern China".
(ii) The Palayakkarars system was introduced in Tamil Nadu by _________.
(iii) _________ crop is called as "Golden Fibre" in India.
(iv) The concept of Constitution was first originated in _________.
(v) India conducted its first nuclear test at _________.

30.
31.
32.
33.
34.
35.
36.
37.

www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner

30. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.

Highlight the provisions of the Treaty of Versailles relating to Germany.

31. 19ம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.

Discuss the circumstances that led to the Reform movements of 19th century.

32. (அ) வேறுபடுத்துக :

(i) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்.

(ii) தனிநபர் தகவல் தொடர்பு மற்றும் பொதுத் தகவல் தொடர்பு.

(ஆ) காரணம் கூறுக :

கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

(a) Distinguish between :

(i) Renewable and Non-renewable resources.

(ii) Personal communication and Mass communication.

(b) Give reasons for the following :

Eastern Ghats are not a continuous range.

33. 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்.

Discuss the causes of the Revolt of 1857 in detail.

34. தமிழ்நாட்டின் சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.

Estimate Periyar E.V.R's decisive contribution to the Social transformation of Tamil Nadu.

35. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரிக்கவும்.

What are the powers and functions of the Chief Minister ?

36. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.

Write a detailed note on Non-Aligned Movement.

37. இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்.

Describe the forests of India.

[ திருப்புக / Turn over

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CS CamScanner

**38.** இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.
Describe the major challenges of Indian Industries.

**39.** பசுமைப் புரட்சி ஏன் தோன்றியது என்பதைப் பற்றி விவரிக்கவும்.
Elucidate why the Green Revolution was Born.

**40.** வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் யாவை ?
What are the important characteristics of successful industrial clusters ?

குறிப்பு : பார்வைக் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

**Note : Visually Challenged candidates have to write only notes for the questions related to Timeline Chart and Map.**

**41.** கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
Draw a Timeline for the following.
Write any five important events between 1930 to 1950.

**42.** இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.
(i) தண்டி
(ii) மதராஸ்
(iii) பாரக்பூர்
(iv) மீரட்
(v) ஜாலியன்வாலா பாக்

Mark the following places on the map of India.
(i) Dandi
(ii) Madras
(iii) Barrackpore
(iv) Meerut
(v) Jallianwala Bagh

www.Padasalai.Net


CS CamScanner

## பகுதி - IV / PART - IV

**குறிப்பு :** பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**Note :** Answer the following questions. **2x8=16**

**43.** (அ) கீழ்கண்ட தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(I) முதல் உலகப் போர் :

(i) முதல் உலகப் போர் எப்பொழுது துவங்கியது ?

(ii) மைய நாடுகள் என அழைக்கப்பட்ட நாடுகள் எவை ?

(iii) முதல் உலகப் போரில் அமெரிக்கா எந்த ஆண்டு இறங்கியது ?

(iv) ஜெர்மனியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பெயர் என்ன ?

(II) சமூக சீர்திருத்த இயக்கங்கள் :

(i) பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்தவர் யார் ?

(ii) சத்யார்த்தபிரகாஷ் என்னும் நூலின் ஆசிரியர் யார் ?

(iii) இராமகிருஷ்ண பரமஹம்சர் என்பவர் யார் ?

(iv) சுவாமி விவேகானந்தரின் இளமை பெயர் என்ன ?

**அல்லது**

(ஆ) (i) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்.

(ii) கிளாபத் இயக்கம் பற்றி குறிப்பு வரைக.

(a) Answer the following questions given below the heading :

(I) First World War :

(i) When did the First World War begin ?

(ii) Which countries are called Central Power ?

(iii) When was America entered in the World War-I ?

(iv) Write the name of the treaty relating to Germany.

(II) Social reform movements :

(i) Who founded the Brahmo Samaj ?

(ii) Who was the author of the book 'Satyarthaprakash' ?

(iii) Who was Ramakrishna Paramahamsa ?

(iv) What was the early name of Swami Vivekananda ?

**OR**

(b) (i) Discuss the response to Swadeshi movement in Tamil Nadu.

(ii) Write a note on the Khilafat movement.

[ திருப்புக / Turn over

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CamScanner

குறிப்பு : பார்வை குறைபாடுடைய மாற்றுத் திறனாளி மாணவர்கள் வரைபடம் தொடர்புடைய வினாக்களுக்கு குறிப்புகள் மட்டும் எழுதவும்.

**Note :** **Visually Challenged candidates have to write only notes for the questions related to map.**

**44.** (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

(i) ராண் ஆப் கச்

(ii) கங்கை நதி

(iii) Mt. K2

(iv) கிழக்குத் தொடர்ச்சி மலை

(v) வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை

(vi) மன்னார் வளைகுடா

(vii) மாங்குரோவ் காடுகள்

(viii) மேட்டூர் அணை

அல்லது

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைச் குறிக்கவும்.

(i) சோழமண்டல கடற்கரை

(ii) பாக் ஜலசந்தி

(iii) சென்னை

(iv) நீலகிரி

(v) நெல் விளையும் பகுதி

(vi) வேதாரண்யம்

(vii) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்

(viii) அகத்தியமலை

www.Padasalai.Net



CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



(a) Mark the following places on the given outline map of India.

(i) Rann of Kachch

(ii) River Ganga

(iii) Mt. K2

(iv) Eastern ghats

(v) North East monsoon direction

(vi) Gulf of Mannar

(vii) Mangrove forest

(viii) Mettur Dam

**OR**

(b) Mark the following places on the given outline map of Tamil Nadu.

(i) Coromandel coast

(ii) Palk strait

(iii) Chennai

(iv) Nilgiris

(v) Paddy growing Area

(vi) Vedaranyam

(vii) Vedanthangal Bird Sanctuary

(viii) Agasthiyamalai

www.Padasalai.Net

- o O o -

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CamScanner